# III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

MCOP.No.249/2020

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt.R.Santhi/Translator
in accordance with the provision of Act I for 1873 on 19-08-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : S.Jayalakshmi | Village | : |
| Husband Name | : Vivek Anbarasu | Taluk | : |
| Age | : | Calling | : |

<u>மூன்றாம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் இறந்து போன விவேக் எனது கணவர். இரண்டாவது மனுதாரர் சதுர்பூஜாவின் தாயார் சர்மிளா. எனக்கு குழந்தை இல்லை. 20.01.2020 அன்று எனக்கு திருமணம் நடைபெற்றது. அந்த விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கும் விவேக்கிற்கும் திருமணம் கோவிலில் நடைபெற்றது அதற்கான ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்ாறல் இல்லை. நாங்கள் கோயிலில் பதிவு செய்யவில்லை. தாலிக்கட்டி திருமணம் செய்து கொண்டோம். திருவேற்காடு நாகாத்தம்மன் கோயிலில் திருமணம் நடைபெற்றது. எனது குடும்ப உறுப்பினர்கள் திருமணத்தில் கலந்து கொண்டார். திருமணத்தில் எடுத்த போட்டோக்கள் தாக்கல் செய்யவில்லை. சர்மிளாவிற்கும் விவேக்கிற்கும் நடைபெற்ற விவாகரத்து வழக்கு பற்றி எனக்கு தெரியும். அவர்களுக்கு 10.01.2020 அன்று consent divorce நடைபெற்றது. விவேக்கினுடைய சொந்த ஊரில் அவரினுடைய உடல் புதைக்கப்பட்டது. வாரிசு உரிமை சான்றிதழ்

வழங்கப்படுவதற்கு முன்னர் வருவாய் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். எனது மாமியார் என்னுடன் வசித்து வந்தாரா என்றால் இல்லை. முதல்வர் நிவாரண நிதி நான் பெறவில்லை. அதை விவேக்கின் தாயார் பெற்றுள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. ஜெயம்கொண்டம் வழக்கறிஞர் திரு.ஜெயராமன் என்பவர் எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை. கோயிலில் கொடுத்த சான்றிதழில் 14.06.2019 அன்று திருமணம் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் விவேக்கின் சட்டப்பூர்வ மனைவி அல்ல என்றும் ஆதலால் எனக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.